

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் சிறப்புரையாற்றினர். இதில் திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன் உள்பட மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.A

### 'நான் முதல்வன்' திட்டத்தைத் தொடர்ந்து –

# 'முதல்வர் படைப்பகம்' எனும் பெயரில் 'முதல்வர்' என்ற சொல் நீக்கம்!

சென்னை, ஜூலை 7 -

'நான் முதல்வன்' திட்டத்தைத் தொடர்ந்து, 'முதல்வர் படைப்பகம்' பெயரில் இருந்து 'முதல்வர்' என்ற சொல் நீக்கப்பட்டதற்கு கண்டனங்கள் வலுத்துள்ளன.

த.வெ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து தி.மு.க. அரசின் திட்டங்களை பெயர்களை மாற்றி அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் செயல்பட்டு வருகிறது.

தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட 'நான் முதல்வன்' திட்டத்தின் பெயரை மாற்றியதற்கு ஏற்கனவே கண்டனங்கள் எழுந்தன.

இந்த நிலையில், 'முதல்வர் படைப்பகம்' திட்டத்தில் 'முதல்வர்' என்ற சொல் நீக்கப்பட்டுள்ளது. 'முதல்வர் படைப்பகம்'

## வலுக்கும் கண்டனங்கள்!

என்பதற்கு பதிலாக 'படைப்பகம்' என புதிய டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சியில் சென்னையில் 16 இடங்களில் கொண்டுவரப்பட்ட 'முதல்வர் படைப்பகம்' மூலம் ஏராளமான மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு படிக்கும் சூழலை ஏற்படுத்தவும், புத்தொழில் தொடங்குவோர் குறைந்த கட்டணத்தில் தங்கள் அலுவலகமாகப் பயன்படுத்திக்கொள்ளவும் 'முதல்வர் படைப்பகம்' முக்கியப் பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

### கழக ஆட்சியின் ரூ.4,500 கோடி மதிப்பிலான

# வாய்க்கால் மேம்பாட்டு திட்டங்களை த.வெ.க. அரசு முடக்குவதா?

## கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் கண்டனம்!



கோவை, ஜூலை 7 -

கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பி.ஏ.பி. விவசாயிகள் நலம் இந்த சோபா மாடல் அரசின் கோமாளி திட்டத்தால் பாதிக்கப்படும், இந்த அரசு பி.ஏ.பி. வாய்க்கால்களை மாற்றி 126 கிலோ மீட்டர் தூரத்திற்கு குழாய் பதிக்கும் திட்டம் கொண்டு வர முயற்சிக்கிறது. இது நடைமுறைக்கு ஒத்துவராது. அது நிலத்தடி தண்ணீரை வெகுவாக பாதிக்கும் அபாயகரமான திட்டம்.

திராவிட முன்னேற்றக் கழக தலைவர், என்னாலும் எங்கள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கடந்த கால ஆட்சியில் இந்த கால்வாய்கள் சிதிலமடைந்ததை தொடர்ந்து விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று சரி செய்ய நிபுணர்களிடம் கலந்து ஆலோசித்து ரூபாய் 4,500 கோடி செலவில் அருமையான திட்ட வடிவம் முன்னெடுக்கப்பட்டது. அந்த திட்டத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியால் இந்த அரசு கைவிட்டு சினிமா பாணியில் குழாய் பதிக்கும் திட்டம் கொண்டுவருகிறது. இது நடைமுறைக்கு ஒத்து வராத நிலத்தடி நீரை பாதிக்கும் பி.ஏ.பி. பாசன வாய்க்கால்களை குழாய்களாக மாற்றும் திட்டத்தை தமிழக அரசு கைவிட வேண்டும்.

இந்த அறிவிப்பை திரும்ப பெறாவிட்டால் போராட்டம் வெடிக்கும்.

பரம்பிக்குளம் ஆழியார் திட்டம் என்பது மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் உள்ள பல ஆறுகளின் நீரை அணைகள், சுரங்க ங்கள், வாய்க்கால்கள் மூலம் திருப்பி கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்ட வறட்சி பகுதிகளுக்கு கொண்டுசெல்லும் மிகப் பெரிய பாசன திட்டம் ஆகும் இதில் பத்து அணைகள், ஆறு சுரங்கள், நான்கு மின்நிலையங்கள் மற்றும் எழு முக்கிய வாய்க்கால்கள் உள்ளன பிஏபி மூலம் கிடைக்கும் நீர் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் வறட்சி நிலங்களை பாசன நிலங்களாக மாற்ற உதவியது. இதனால் தென்னை, கரும்பு, நெல் மற்றும் பல்வேறு பயிர்களின் உற்பத்தி அதிகரித்தது. பி.ஏ.பி. திட்டத்தால் பல இலட்சம் ஏக்கர் பாசன வசதி மட்டும் அல்ல அந்த பகுதிகளில் நிலத்தடி நீரும் அதிகம் ஆகி விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் பயன்படுகின்றது. அதேபோல 155 மெகாவாட் நீர்மின் உற்பத்திக்கும் திட்டம் உதவி கொண்டு இருகின்றது.

பி.ஏ.பி. திட்டம் என்பது பெருந்தலைவர் காமராஜர், மரியாதைக்குரிய சி.சுப்பிரமணியம், அருட்செல்வர் மகாலிங்கம் ஆகியோர் முக்கிய பங்காற்றி அத்திட்டத்தை உருவாக்கினார்கள், ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் திட்ட விரிவாக்கங்களுக்கும் நீண்ட காலம் நிலுவையில் இருந்த கால்வாய் பணிகளையும் நிறைவு செய்தார். பி.ஏ.பி. திட்டம் மூலம் நான்கு இலட்சத்தி இருபத்தி ஐந்து ஆயிரம் (4,25,000) ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன, பி.ஏ.பி. திட்டத்தின் இதயமாக விளங்கும் காண்டூர் கால்வாய் முழுவதும் திட்டத்தில் உள்ள அணைத்து கிளை கால்வாய்கள், பகிர்மான கால்வாய்கள் மற்றும் கால்வாயில் உள்ள மதகுகள் பழுதடைந்து காணப்படுகிடன்றன இதனால் பாசன நீர் வீணாகி கடைமடை வரை தண்ணீர் சென்று சேர்வதில்லை இதனால் விவசாயிகள் எந்தவிதமான பயிர் சாகுபடி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதற்கு இடையில் திருப்பூர் வந்த அமைச்சர் அருண்ராஜ் அந்ததிட்ட அறிக்கை செயல் படுத்தபடாது என்று அறிவித்தார் இது பல இலட்சக்கணக்கான விவாசயிகளுகும், பொது மக்களுக்கும் மனஉளைச்சலை ஏற்படுத்தி உள்ளது. பி.ஏ.பி. வாய்க்கால் வெறும் தண்ணீர் செல்லும் பாதைகள் அல்ல அது பல மாவட்டங்களுக்கு பல ஆண்டுகளாக நிலத்தடி நீரை செறிவூட்டி வாய்க்காலின் இரு புறங்களிலும் உள்ள விவசாய நிலங்களையும், கிணறுகளையும் பாதுகாத்து வருகின்றன குழாய் திட்டம் நடைமுறைக்கு வந்தால் நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டு வாய்க்கால் ஒட்டி உள்ள விவசாய நிலங்கள் மற்றும் தோட்ட பயிர்கள் கடுமையாக பாதிக்கப்படும் பல ஆயிரம் ஏக்கர் வளமான விளை நிலங்கள் பாலைவனமாக மாறும், அதுபோக பொது மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. குழாய் மூலம் தண்ணீர் கொண்டு செல்வது என்பது முட்டாள்தனம், 10 கிலோ மீட்டர், 20 கிலோ மீட்டர் குழாய் மூலம் தண்ணீர் கொண்டு செல்வது என்பது சாத்தியம். ஆனால் 126 கிலோ மீட்டர் நீளமுடைய பி.ஏ.பி. வாய்க்கால் தண்ணீரை குழாய் மூலம் கொண்டு சென்று நான்கு இலட்சத்தி இருபத்தி ஐந்து ஆயிரம் (4,25,000) ஏக்கர் பாசனம் செய்ய முடியும் என்பது கனவிலும் செயல்படுத்த முடியாது. அதுபோல எழு மெயின் கால்வாய்களை ஒட்டி ஆயிரக்கணக்கான கிளை வாய்க்கால்கள் மூலம் விவசாயிகளுக்கு தண்ணீர் சென்று கொண்டு இருப்பது இந்த அமைச்சருக்கு தெரியுமா? தெரியாத? என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து கிளை வாய்க்கால்கள் வரை பார்வையிட்டு கருத்து சொல்ல விரும்புகிறோம். அதுமட்டுமல்ல மலைப்பகுதிகளில் மழைக் காலங்களில் உருண்டு ஓடி வரும் தண்ணீரில் வனவிலங்குகள் இறந்து அடித்து வரும் அது குழாய்களை அடைத்துக் கொள்ளும் நிலை உருவாகும்.

வாய்க்கால்கள் என்பது நிலத்தடி நீரை பாதுகாக்கும் உயிர் நாடிகள் மேலும் வாய்க்கால்களை அளிக்காமல் வல்லுனர்கள் மூலம் மேம்படுத்த ரூபாய் 4,500 கோடி மதிப்பில் உருவான வாய்க்கால் மேம்பாடு திட்டம் என்பது பி.ஏ.பி. விவசாயிகளின் மிகப்பெரிய வரப்பிரசாதம். எப்படி முன்னாள் முதல்வர்கள் கஷ்டப்பட்டு இந்த திட்டத்தைதுவக்கினார்களோ, அதேபோல முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் ரூபாய் 4,500 கோடி மதிப்பிலான வாய்க்கால் மேம்பாட்டு திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளார். இத்திட்டத்தின் நோக்கம் மற்றும் பயன் தெரியாதவர்கள் திட்டத்தை முடக்கப் பார்க்கிறார்கள் என்பது ஏற்றுக் கொள்ள முடியாது.

குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு செல்லும் அறிவிப்பை திரும்ப பெறாவிட்டால் தி.மு.க. சார்பாக போராட்டம் வெடிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கும் இந்த சோபா மாடல் அரசின் சினிமாத்தன திட்டங்களுக்கு எதிராக இந்த பகுதி விவசாய பெருங்குடி மக்களின் கிளர்ந்தெழும் போராட்டத்திற்கு காரணமாக வேண்டாம் என எச்சரிக்கிறேன் என்று அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கோவை, வடகோவையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மாவட்ட கழக அலுவலகத்தில் மனிதநேய மக்கள் கட்சியைச் சேர்ந்த செரீப் தலைமையில் 100க்கும் மேற்பட்டோர் கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். உடன் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பகுதி கழக பொறுப்பாளர் பாரதிநகர் செல்வம், 62வது அ,ஆ வட்டக் கழக பொறுப்பாளர்கள் சபீர்அலி, முத்துக்குமார், பிஎல்ஏ2 ராஜசேகர், பரூக் சிராஜ், சபீர், முத்துக்குமார், பர்சனா பர்வீன், ஆசில் உள்பட பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் பேரூராட்சி, கே.டி.எல் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் அமைக்கப்பட்ட பேருந்து நிழற்குடையை பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே. ஈஸ்வரசாமி, மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் திறந்து வைத்தனர். இதில் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற தலைவர், துணை தலைவர், உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பாலியல் குற்றச்சாட்டில் சிறை சென்ற நபரை அரசு விழாவுக்கு அழைத்துச் சிறப்பு செய்வதா?

# இதுதான் த.வெ.க. உறுதியளித்த பெண்கள் பாதுகாப்பா?

### வலைதளப் பதிவில் – கழக துணைப் பொதுச் செயலாளர்

## கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!






**சென்னை,ஜூலை.7 -**

**பாலியல் குற்றச்சாட்டில் சிறை சென்ற நபரை அரசு விழாவிற்கு அழைத்து, அழகுபார்த்த த.வெ.க. அரசுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

திமுக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:

பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி கைது செய்யப்பட்டு சிறை சென்ற தவெக நிர்வாகியை, அரசு விழாவிற்கு அழைத்து அழகுபார்ப்பது ஒருபுறம், பாலியல் வன்கொடுமை புகாரைத் திருப்பிப் பெறும்படி திருவைகுண்டத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணை மிரட்டும் தவெக எம்.எல்.ஏ மறுபுறம் என்றும், இது தான் த.வெ.க. உறுதியளித்த பெண்கள் பாதுகாப்பா?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஆலந்தூரில் பாலியல் புகாரில் கைதான

# த.வெ.க. நிர்வாகி அரசு நிகழ்ச்சியில் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 7-

ஆலந்தூரில் நடந்த மக்கள் குறை தீர்க்கும் முகாமில் ஹரிஷ் எம்எல்ஏ மனுக் கள் பெற்றார். அப்போது, பாலியல் புகாரில் சிக்கி, தவெக பொறுப்பிலிருந்து நீக்கப் பட்ட நிர்வாகியும் அரசு நிகழ்ச்சியில் பங்கேற்ற தால் சலசலப்பு ஏற்பட்டது. சென்னை மாநக ராட்சி, ஆலந்தூர் 12வது மண்ட லத்திற்குட்பட்ட பொது மக்களுக்கான குறை தீர் முகாம், ஆலந்தூர் புது தெருவில் உள்ள முதல்வர் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் நடந்தது. ஆலந்தூர் மண்டல உதவி கமிஷனர் முருக தாஸ் தலைமை வகித்தார். செயற்பொறியாளர் மணிமொழி, உதவி வருவாய் அலுவலர் கண்ணன் முன்னிலை வகித்தனர்.

இந்த முகாமில், ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஹரிஷ் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்றார். இதில் புதிய ரேஷன் கார்டு, பட்டா மாற்றம் கேட்டும், கூடுதல் வரி உயர்வை குறைக்க கோரியும், பழவந்தாங்கலில் குளம் ஆக்கிரமிப்பு, எம்.கே.சாலை நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்ற கோருவது உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட மனுக்களை பொது மக்கள் கொடுத்தனர்.

அப்போது அண்மையில் பாலியல் புகாரில் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்த வேம்புலி என்பவரும் உடனிருந்தார். பாலியல் புகாரால் கட்சி பொறுப்பிலிருந்து நீக்கப் பட்டவர் எப்படி அரசு நிகழ்ச்சியில் பங்கேற்கலாம் என கேட்டு த.வெ.க.வினரி டையே சலசலப்பு ஏற்பட்டது. மேலும் இந்த குறைதீர் நிகழ்ச்சிக்கு உள்ளாட்சி அமைப்பை சேர்ந்த ஆலந்தூர் மண்டல குழு தலை வர், மாமன்ற உறுப்பினர் கள், யாருக்கும் அழைப்பு விடுக்கப்பட வில்லை என கூறப்படுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.எஸ்.குமாரசாமி

**ஜூலை 7 (2004)**



**இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு காங்கேயம் பேரூர்ச் செயலாளர், காங்கேயம் ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.**

**காங்கேயம் பேரூராட்சி துணைத் தலைவர், காங்கேயம் கூட்டுறவு நிலவள வங்கி தலைவர் ஆகிய பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**